# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

**අති විශෙෂ**

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

**අංක 2453/37 - 2025 සැප්තැම්බර් මස 12 වැනි සිකුරාදා - 2025.09.12**

2453/37 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: WGSWD&EIP/ACQ/MH/15.
கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும்
நீர்ப்பாசன அமைச்சின் இல.: 4-3/10/2018/LRB/ 51.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

(வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டத்தின் கீழ், ஜம்புகஸ்முல்ல மாவத்தை மற்றும் ஜம்புகஸ்முல்ல இரண்டாம் ஒழுங்கையைச் சூழவுள்ள பிரதேசத்தினூடாக வழிந்தோடும் மழைநீரை மெல்டர் பிளேஸ் இற்கும் பீல்ட் மாவத்தைக்கும் இடையே அமைந்துள்ள வாவி வரை வழிந்தோடுவதற்காக வடிகாலொன்றை அமைப்பதற்கும், வாவியை பராமரிப்பதற்கும் அதே போன்று பொது மக்களுக்கு வாவி வரை பயணிப்பதற்கும் பிரவேச வீதியொன்றை அமைப்பதற்கும் தேவையான காணித் துண்டுகளை அரசுக்கு எடுத்துக் கொள்ளல்)

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், மகரகமை பிரதேச செயலாளர் பிரிவில் இல. 526/D - ஜம்புகஸ் முல்ல கிராம அலுவலர் பிரிவில் மகரகமை நகர சபை எல்லைக்குட்பட்ட கங்கொடவில கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட கடத்திரல் வரைபட இல. 521428 (தொகுதி இல. 01, தாள் இல. 1) இல் துண்டு இல. 1 தொடக்கம் துண்டு இல. 3 வரை காட்டப்பட்ட 0.0296 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப்பட்ட மூன்று (03) காணித்துண்டுகளின் விபரங்கள் பின்வருமாறு:

01. **துண்டு இல. 1**
காணியின் பெயர்: - ; விபரம்: வீதி; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: திரு. கே. வீ. டீ. கே. கே. கோட்டாபய, இல. A13G1, மெனிங் டவுன் வீடமைப்புத் தொகுதி, மங்கல வீதி, பொரளை. திருமதி ரங்கிகா மதாரா வடுகே, இல. 68/2, ஜம்புகஸ்முல்ல மாவத்தை, நுகேகொடை; விஸ்தீரணம்: 0.0213 ஹெக்டயார்.



*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**02. துண்டு இல. 2**

காணியின் பெயர்: - ; விபரம்: சீமெந்து வடிகால்; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: திரு. கே. வீ. டீ. கே. கே. கோட்டாபய, இல. A13G1, மெனிங் டவுன் வீடமைப்புத் தொகுதி, மங்கல வீதி, பொரளை. திருமதி ரங்கிகா மதாரா வடுகே, இல. 68/2, ஜம்புகஸ்முல்ல மாவத்தை, நுகேகொடை; விஸ்தீரணம்: 0.0010 ஹெக்டயார்.

**03. துண்டு இல. 3**

காணியின் பெயர்: - ; விபரம்: சீமெந்து வடிகால்; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: திரு. கே. வீ. டீ. கே. கே. கோட்டாபய, இல. A13G1, மெனிங் டவுன் வீடமைப்புத் தொகுதி, மங்கல வீதி, பொரளை. திருமதி ரங்கிகா மதாரா வடுகே, இல. 68/2, ஜம்புகஸ்முல்ல மாவத்தை, நுகேகொடை; விஸ்தீரணம்: 0.0073 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 22 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு இராஜகிரிய, வெலிக்கடை, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, இல. 3 இல் அமைந்துள்ள இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டத்தின் காணி எடுத்துக் கொள்ளல் அலுவலகத்தில் என் முன் வெளிப்படுத்தும்படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நட்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எச். திலக்கவர்தன,  
காணி எடுத்தல் உத்தியோகத்தர்,  
வேரஸ்கங்க மழைநீர்  
வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல்  
மேம்படுத்தல் கருத்திட்டம்.  
மகரகமை பிரதேச செயலாளர் பிரிவு.

வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல்  
மேம்படுத்தல் கருத்திட்டத்தின் காணி  
எடுத்துக் கொள்ளல் அலுவலகம்,  
இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்,  
இல. 3, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,  
வெலிக்கடை, இராஜகிரிய,  
2025, செத்தெம்பர் 09.

EOG 09 - 0100

---

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: WGSWD&EIP/ACQ/KB/19.  
கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும்  
நீர்ப்பாசன அமைச்சின் இல.: 4-3/10/2013/LRB/108.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டப்படி திருத்தப் பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

(வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டத்தின் கீழ், பிலியந்தலை மாம்பே வடக்கில் அமைந்துள்ள கொழும்பு - ஹொரணை பிரதான பஸ் வீதிக்கும் பிரியந்தலை - மகரகமை வீதிக்கும் இடையில் அமைந்துள்ள கைவிடப் பட்ட வயல் வெளியில் நீர் ஒதுக்குப் பிரதேசமொன்றை அமைப்பதற்கும் வாய்க்காலொன்றை அமைப்பதற்கு மான காணி எடுத்துக் கொள்ளல்)

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கெஸ்பேவை பிரதேச செயலாளர் பிரிவில் இல. 576/B - தும்போவில தெற்கு கிராம அலுவலர் பிரிவில் கெஸ்பேவை நகர சபை எல்லைக்குட்பட்ட தும்போவில கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2024.02.12 ஆந் திகதிய கடத்திரல் வரைபட இல. 521203 (தொகுதி இல. 07, தாள் இல. 21) இல் துண்டு இல. 1 எனக் காட்டப்பட்ட காணித் துண்டின் விபரங்கள் பின்வருமாறு:

**01. துண்டு இல. 1**

காணியின் பெயர்: கரிந்த கும்புர; விபரம்: வீட்டுத் தோட்டம்; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: திரு. தலவெல்ல ஹேவகே சுபசிங்ஹ, இல. 329/B, கொழும்பு வீதி, பிலியந்தலை; விஸ்தீரணம்: 0.0045 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 22 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு இராஜகிரிய, வெலிக்கடை, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, இல. 3 இல் அமைந்துள்ள இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டத்தின் காணி எடுத்துக் கொள்ளல் அலுவலகத்தில் என் முன் வெளிப்படுத்தும்படியும்

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எச். திலக்கவர்தன,
காணி எடுத்தல் உத்தியோகத்தர்,
வேரஸ்கங்க மழைநீர்
வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல்
மேம்படுத்தல் கருத்திட்டம்.
கெஸ்பேவை பிரதேச செயலாளர் பிரிவு.

வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல்
மேம்படுத்தல் கருத்திட்டத்தின் காணி
எடுத்துக் கொள்ளல் அலுவலகம்,
இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்,
இல. 3, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,
வெலிக்கடை,
இராஜகிரிய,
2025, செத்தெம்பர் 09.

EOG 09 - 0101

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: WGSWD&EIP/ACQ/KB/18.
கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும்
நீர்ப்பாசன அமைச்சின் இல.: 4-3/10/2012/LRB/328.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தலின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2021.12.17 ஆந் திகதிய 2258/51 ஆம் இலக்க அதிவிசேட வர்த்த மானியில் பிரசுரிக்கப்பட்ட கை:9839 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் துண்டு இல. 54, 66 எனக் காட்டப்பட்ட காணித்துண்டுகள் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2025.07.14 ஆந் திகதிய CO/DSO/2025/121 ஆம் இலக்க சுவடு வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறு கீழ் விபரிக்கப்பட்டுள்ளவாறு திருத்தப்படுகின்றது என்பதை நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

01. **துண்டு A (துண்டு இல. 54 இன் திருத்தப்பட்ட காணித்துண்டு)**

காணியின் பெயர்: - ; விபரம்: சதுப்பு நிலம்; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: திரு. ஜீ. டீ. பி. குணசேக்கர, இல. 570, கங்காராம வீதி, வேரஹெர, பொரலஸ்கமுவை; விஸ்தீரணம்: 0.2944 ஹெக்டயார்.

02. **துண்டு B (துண்டு இல. 66 இன் திருத்தப்பட்ட காணித்துண்டு)**

காணியின் பெயர்: வாத்துவ கும்புர, கரதியானவத்த, கோன்கஹவத்த அல்லது கல்பொத்தேவத்த, பாதுக்க கும்புர மற்றும் வியதன்வல கும்புர; விபரம்: சதுப்பு நிலம்; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: திரு. ஜீ. டீ. பி. குணசேக்கர, இல. 570, கங்காராம வீதி, வேரஹெர, பொரலஸ்கமுவை; விஸ்தீரணம்: 1.0935 ஹெக்டயார்.

எச். திலக்கவர்தன,
காணி எடுத்தல் உத்தியோகத்தர்,
வேரஸ்கங்க மழைநீர்
வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல்
மேம்படுத்தல் கருத்திட்டம்.
கெஸ்பேவை பிரதேச செயலாளர் பிரிவு.

வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல்
மேம்படுத்தல் கருத்திட்டத்தின் காணி
எடுத்துக் கொள்ளல் அலுவலகம்,
இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்,
இல. 3, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,
வெலிக்கடை,
இராஜகிரிய,
2025, செத்தெம்பர் 11.

EOG 09 - 0102

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.